# மொறவெவ பிரதேச சபை
# திருகோணமலை மாவட்டம்.

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூலை 25 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 பெப்ரவரி 03 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்ட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய மொறவெவ பிரதேச சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய மொறவெவ பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைாபடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 184,111 தொகையினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தவறான கணிப்பிடலினால் நிலையான வைப்பிற்குரிய வட்டி வருமானம் ரூபா 22,449 தொகையினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 2,157,350 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் நிதிக் கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதியில் பெறவேண்டிய வாடகை வருமானம் ரூபா 10,617 தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(2) ஆம் பிரிவின் பிரகாரம் 1998 தொடக்கம் 2009 வரையான ஆண்டுகளுக்கான கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடுகள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 116,297 ஆக இருந்தது.

### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 660,118 ஆகும்.

### 1.3.3 வங்கிக் கணக்குகள்

வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களை பகுப்பாய்வு செய்து பின்வரும் கூற்றில் தரப்படுகின்றது.

| | விபரங்கள் | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | காலப்பகுப்பாய்வு | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | 6 மாதங்களுக்கு மேல் 12 மாதங்களுக்குக் குறைவு | 1-3 வருடங்கள் | 3 வருடங்களுக்கு மேல் | |
| | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 19 | 875 | 13,260 | - | 14,135 |
| ii. | இனங்காணப்படாத தொகைகள் | 01 | 12,062 | - | - | 12,062 |

வங்கி நேரடியாக வசூலித்த ரூபா 3,484,815 தொகைக்குரிய பதிவுகள் எதனையும் பிரதேச சபை மேற்கொண்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

**பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 08 கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத அதேவேளை அக்கணக்காய்வு ஐயவினாக்களுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடக் கூடிய பெறுமதி ரூபா 767,725 ஆகும்.

### 1.3.5 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1989 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிகள் | |
| (i) பகுதி II இன் 16(1) ஆம் பிரிவு | பிரதேச சபையானது அசையும் மற்றும் அசையாத சொத்துக்களுக்கான பதிவேட்டினைப் பேணியிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் I இன் 5(xi) ஆம் பிரிவு | காசு, களஞ்சியம் போன்றவைகள் தொடர்பாக காப்புறுதிப் மேவுகையொன்று பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் I இன் 5(xii) ஆம் பிரிவு | காசு, களஞ்சியம் போன்றவைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து போதுமான அளவு- பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iv) அத்தியாயம் XII இன் 217 ஆம் | காணி மற்றும் கட்டிடப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

பிரிவு

| | | |
|---|---|---|
| (ஆ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் அதிகாரச் சட்டத்தின் 153 ஆம் பிரிவு | நிர்மாண வேலைகள் மற்றும் பொருட்கள் கொள்வனவுகளுக்கான கொடுப்பனவுகளிலிருந்து ரூபா 11,108 கூட்டுத்தொகையான நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |

(இ) நிதிப்பிரமாணங்கள்

| | | |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் இல 395 | மாதாந்தம் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் மாதாந்தம் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களை சபை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் இல 394 மற்றும் 396 | 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 27,862 தொகையான 19 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் இல 383 | 2008 முதல் 2010 நவம்பர் வரை வங்கியால் நேரடியாகப் பெறப்பட்ட ரூபா 773,209 தொகையானது வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்ளின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 1,084,191 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,390,750 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடரபான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 25 | 67 | -- | 06 | -- | 06 |
| (ii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 90 | 42 | 48 | 58 | 43 | 15 |
| (iii) | வேறு வருமானங்கள் | 5,847 | 2,696 | 3,151 | 3,690 | 1,968 | 1,722 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணங்கள்

பல்வேறு கட்டளைகளின் கீழ் திருகோணமலை நீதவான் நீதி மன்றத்தால் 2010 திசெம்பர் 31 வரை சேகரிக்கப்பட்டு பிரதம செயலாளர் / மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 2,157,350 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்களைப் பெற சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை. சபையினால் பெறவேண்டிய நீதிமன்ற தண்டப் பணங்களை கணிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

பதிவாளர் நாயகத்திடமிருந்து முத்திரைக் கட்டணங்களாக பெறவேண்டிய தொகை கணிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 முரண் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 2,813 | 2,746 | (67) | 3,600 | 2,948 | (652) |
| ஏனையவை | 1,072 | 1,266 | 194 | 1,234 | 1,702 | 468 |
| உப மொத்தம் | **3,885** | **4,012** | **127** | **4,834** | **4,650** | **(184)** |
| மூலதனச் செலவினம் | 150 | 261 | 111 | 280 | 521 | 241 |
| முழு மொத்தம் | **4,035** | **4,273** | **238** | **5,114** | **5,171** | **57** |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | பற்றாக்குறை/ மேலதிகம் |
|---|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 01 | - | 01 |
| இரண்டாம் நிலைதரங்கள் | 09 | 04 | 05 |
| ஆரம்ப தரங்கள் | 08 | 08 | -- |
| மொத்தம் | 18 | 12 | 06 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகள் ரூபா 131,234 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேலாக பெறவேண்டிய கணக்குகள் மீதிகள் ரூபா 46,454 ஆகும்.

### 2.5.2 பெறவேண்டிய உத்தியோகத்தர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய உத்தியோகத்தர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,124,535 ஆன அதேவேளை 01 ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்ற மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 715,635 ஆகும்.

### 2.5.3 மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாத சொத்துக்கள்

பௌதீக மெய்மையாய்வு / மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் மூலம் உறுதி செய்யப்படாத 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஏட்டுப் பெறுமதியில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 27,598,220 ஆகும்.

## 2.6 இனங்காணப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள்

தெரிவுக் கணக்காய்வு மற்றும் சபையால் பேணப்பட்ட தகவல்களின்படி, ரூபா 32,944 பெறுமதியான இழப்புக்களும் சேதங்களும் வெளிப்பட்டது.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) முற்பணம்
(ஈ) வருமான சேகரித்தல்